www.Padasalai.Net

26\. அ) பின்வரும் நடவடிக்கைகளை கணக்கியல் சமன்பாடாக உருவாக்கவும்.

i) ஜனவரி 1 2018 அன்றைய தொடக்க இருப்புகள்

ரொக்கம் ₹.20,000, சரக்கிருப்பு ₹.50,000, வங்கி ₹.80,000

ii) சுரேஷிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹.10,000

iii) வங்கிக் கட்டணம் ₹.500

iv) கடன் அட்டை மூலம் சுரேஷிற்கு ₹.9,700 கொடுத்து கணக்கு தீர்க்கப்பட்டது

v) பிலிப்பிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹.15,000

vi) பிலிப்பிடமிருந்து சரக்கு திருப்பி அனுப்பியது ₹.40,000

***(அல்லது)***

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

| 2018 மார்ச், | | ₹. |
|---|---|---|
| 1 | மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம் | 60,000 |
| 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| 6 | கமலேசிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 15,000 |
| 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது | 28,000 |
| 10 | ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது | 10,000 |
| 14 | கமலேசிஸ்கு செலுத்திய ரொக்கம் | 12,000 |
| 18 | வாடகை செலுத்தியது | 500 |
| 25 | ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 8,000 |
| 28 | சொந்த பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது | 4,000 |

27\. அ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாக பேரேட்டில் எடுத்து எழுதவும்.

| 2017 ஜூலை, | | ₹. |
|---|---|---|
| 1 | சங்கர் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 1,00,000 |
| 5 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 10,000 |
| 9 | கூலி ரொக்கமாக கொடுத்தது | 6,000 |
| 19 | சம்பளம் ரொக்கமாக கொடுத்தது | 8,000 |
| 23 | விளம்பரச் செலவுகளுக்காக ரொக்கம் செலுத்தியது | 4,000 |

***(அல்லது)***

ஆ) பிரபு என்பவரின் ஏடுகளில் 31-3-2017 அன்று எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும். ஏதேனும் வேறுபாடு இருப்பின் அதனை அனாமத்து கணக்கிற்கு மாற்றவும்.

| | | | |
|---|---|---|---|
| அளித்த தள்ளுபடி | ₹.250, | கைரொக்கம் | ₹.4,200 |
| முதல் | ₹.50,000 | அறைகலன் | ₹.7,500 |
| பெற்ற கடன் | ₹.7,000 | மின்கட்டணம் | ₹.12,000 |
| கழிவு கொடுத்தது | ₹.3,000 | கொள்முதல் | ₹.29,050 |
| விற்பனை | ₹.35,000 | | |



www.Trb Tnpsc.Com

**முதல் இடைப்பருவத் தேர்வு - 2024** தேர்வு எண்

*காலம் : 1.30 மணி* **XI - கணக்குப்பதிவியல்** *மதிப்பெண் : 50*

பகுதி - 1

***குறிப்பு : 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.*** ***(10x1=10)***

***2) ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.***

1\. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது

அ) சமூகம் கணக்கியல்

ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்

இ) மேலாண்மைக் கணக்கியல்

ஈ) பொறுப்பு கணக்கியல்

2\. பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம் பெறாது?

அ) நிதிநிலைக் கணக்கியல்

ஆ) மேலாண்மைக் கணக்கியல்

இ) மாதவரிக் கணக்கியல்

ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

3\. GAAP என்பது

அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்

ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்

இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல்

ஈ) இவற்றுள் ஏதுமில்லை

4\. இறுதி சரக்கிருப்பு, அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு

அ) முக்கியத்துவ மரபு

ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து

இ) முன்னெச்சரிக்கை மரபு

ஈ) நிகழ்வு தீர்வு / கருத்து

5\. ஒரு நிறுவனத்தின் சொத்துகள் மதிப்பு ₹.1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுக்கான பொறுப்புகள் ₹.60,000 எனில் அந்நிறுவனத்தின் முதல்

அ) ₹.1,60,000

ஆ) ₹.60,000

இ) ₹.1,00,000

ஈ) ₹.40,000

6\. கணக்கியல் சமன்பாட்டின்படி சரியாக இல்லாதது

| | | | | |
|---|---|---|---|---|
| அ) சொத்துக்கள் | = | பொறுப்புகள் | + | முதல் |
| ஆ) சொத்துக்கள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| இ) பொறுப்புகள் | = | சொத்துக்கள் | + | முதல் |
| ஈ) முதல் | = | சொத்துக்கள் | − | பொறுப்புகள் |

7\. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்

அ) கூட்டுதல்

ஆ) எடுத்தெழுதுதல்

இ) குறிப்பேட்டில் பதிதல்

ஈ) இருப்புக் கட்டுதல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net

8. கு.ப.எ என்பது

அ) பேரேட்டுப் பக்க எண்

ஆ) குறிப்பேட்டு பக்க எண்

இ) சான்று சீட்டு எண்

ஈ) ஆணை எண்

9. பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது

அ) வியாபாரக் கணக்கு

ஆ) இருப்பாய்வு

இ) குறிப்பேடு

ஈ) இலாப-நட்டக் கணக்கு

10. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?

அ) ஆள்சார் கணக்குகள் மட்டும்

ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்

இ) பெயரளவு கணக்குகள் மட்டும்

ஈ) அனைத்து கணக்குகளும்

## பகுதி -2

***குறிப்பு : எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.(கட்டாய வினா 17)***

***(5x2=10)***

11. கணக்கியலை வரையறு.

12. வருவாய் தீர்வு கருத்து பற்றி சுருக்கமாக விவரிக்க.

13. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?

14. பற்று இருப்பு என்றால் என்ன?

*15. விடுபட்ட பகுதிகளை நிரப்புக.*

| சொத்துகள் ₹. | = | பொறுப்புகள் ₹. | + | முதல் ₹. |
|---|---|---|---|---|
| 1) 30,000 | = | 20,000 | + | ? |
| 2) ? | = | 25,000 | + | 30,000 |

16. பின்வரும் இனங்களை சொத்து. ஆள்சார் மற்றும் பெயரளவுக் கணக்குகளாக வகைப்படுத்துக.

அ) முதல் ஆ) கொள்முதல்

இ) வணிக நற்பெயர் ஈ) பதிப்புரிமை

17. தேவை எனக் கருதும் இடத்தில் சரியானப் பதிவைத் தருக.

1) தொழில் முதல் இட்டது.

முதல் க/கு ப ____

ரொக்கம் க/கு ____

2) ரொக்க கொள்முதல்.

ரொக்க க/கு ப ____

விற்பனை க/கு ____



www.Trb Tnpsc.Com

## பகுதி -3

***குறிப்பு : எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.(கட்டாய வினா 24)***

***(5x3=15)***

18. கணக்கியலின் முக்கியத்துவத்தின் ஏதேனும் மூன்று தருக.

19. பொருத்துகை கருத்து என்றால் என்ன? ஏன் ஒரு வணிக அமைப்பு இக்கருத்தை பின்பற்ற வேண்டும்?

20. ஆள்சார் கணக்கின் மூன்று வகைகளைக் கூறுக.

21. பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.

அ) முருகன் ₹.80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்

ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹.30,000

இ) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹.5,000

22. கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகளுக்குரிய நடவடிக்கைகளை தருக.

அ) ரொக்கக் க/கு ப ____

அறைகலன் க/கு ____

ஆ) வாடகை க/கு ப ____

ரொக்கக் க/கு ____

இ) வங்கி க/கு ப ____

ரொக்க் க/கு ____

23. திருமதி அமுதா அவர்களின் ஏடுகளில் கீழ்க்காணும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிவு செய்க.

| ஜனவரி 2018, | | ₹. |
|---|---|---|
| 1 | திருமதி அமுதா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 50,000 |
| 2 | ரொக்கக் கொள்முதல் செய்தது | 10,000 |
| 5 | மோகன் என்பவரிடமிருந்து கடனாக கொள்முதல் செய்தது | 6,000 |
| 7 | வங்கியில் செலுத்தியது | 5,000 |
| 10 | அறைகலன் வாங்கியது | 2,000 |
| 31 | ஊதியம் வழங்கியது | 2,800 |

24. சந்திரமோகன் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31-3-2017ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயார் செய்க.

| | | | |
|---|---|---|---|
| முதல் | ₹.1,24,500; | எடுப்புகள் | ₹.2,000; |
| பெற்ற கடன் | ₹.7,000 | விற்பனை | ₹.53,400; |
| கொள்முதல் | ₹.40,000; | வங்கி மேல்வரை பற்று | ₹.5,800 |
| மகிழுந்து | ₹. 20,000; | பொதுச்செலவுகள் | ₹.2,500 |
| கட்டடம் | ₹.1,10,000; | சரக்கிருப்பு | ₹.16,200 |

## பகுதி -4

***குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (3x5=15)***

25. அ) கணக்கியலின் நோக்கங்கள் யாவை?

***(அல்லது)***

ஆ) கணக்கியலின் கோட்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்குக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

Scanned with OKEN Scanner